REGISTERED AS A CATHOLIC WEEKLY. (P.197) Founded 19 Feb 1876

# பாதுகாவலன்

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு PATHUKAVALAN

மலர் 124
இதழ் 19
30 தை 2000
விலை ரூபா 5

# சகல கிறிஸ்தவர்களிடையிலும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவது வத்திக்கான் சங்கத்தின் முதன்மையான கருத்துக்களில் ஒன்றாகும்

"கிறிஸ்து எந்த ஒருமைப்பாட்டிற்காகச் செபித்தாரோ அந்த ஒருமைப்பாட்டில் சகல கிறிஸ்தவர்களும் வாழவில்லை என்பதை நாம் அறிவோம். ஆயினும் பொதுவான ஒரு விசுவாசம், திருமுழுக்கு, திருநூல் ஆகியவற்றின் மூலம் நிறைவற்றதாயிருப்பினும் ஒரு உண்மையான ஐக்கியத்தில் அவர்கள் பங்குகொள்கிறார்கள்"

இவ்வாறு கிறிஸ்தவ ஐக்கிய ஒன்றிப்பு வாரத்தையொட்டி ஜனவரி 22ஆம் திகதி யாழ் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்ற குருக்களுக்கான கருத்தரங்கின்போது அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் கூறினார்.

தொடர்ந்து அவர் தமது உரையில், "சகல கிறிஸ்தவர்களிடையிலும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவது 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் முதன்மையான கருத்துக்களில் ஒன்றாகும். கிறிஸ்து ஒரே திருச்சபையைத்தான் நிறுவினார். ஆயினும் பல்வேறு கிறிஸ்தவ சபைகள் தாமே கிறிஸ்துவின் மரபுரிமை பெற்ற உண்மையான சபை எனக் கூறிக்கொள்கின்றன. இத்தகைய பிளவு கிறிஸ்துவின் சித்தத்துக்கு மாறானது, உலகிற்குத் துர்மாதிரியானது, அனைவர்க்கும் நற்செய்தியைப் போதிக்கும் பணிக்கு இடையூறானது.

கிறிஸ்தவ ஒன்றிப்பு பலாத்காரத்தினாலோ, அதிகாரத்தினாலோ அடையப்படுவதல்ல. பிரிந்த சகோதரர் அனைவரையும் ரோமன் கத்தோலிக்க திருச்சபைக்குத் திரும்பி வருமாறு அழைப்பதனாலும் அடையப்படுவதல்ல.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## றியூசன் வகுப்பு மாணவர்களுக்கான ஞாயிறு திருப்பலி

றியூசன் காரணமாக மாணவர்களில் பலர் ஞாயிறு கடன் திருநாள் திருப்பலியில் கலந்துகொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள். இதனைக் கருத்திற்கொண்டு பெப்ரவரி மாதம் தொடக்கம் ஒவ்வொரு ஞாயிறும் பகல் 12.45 மணிக்கு (பு. நே.) 4ஆம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள அடைக்கல அன்னை ஆலயத்தில் (O.L.R.) திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

அருட்தந்தை ஏ. சி. கிறிஸ்தோப்பர்
யாழ் மறைக்கோட்ட முதல்வர்.

## புங்குடுதீவுச் சம்பவம் - வன்மையாகக் கண்டிக்கிறது நீதி சமாதான ஆணைக்குழு

புங்குடுதீவில் இடம்பெற்ற பாலியல் வன்முறைக் கொலைச் சம்பவத்தை யாழ் மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு வன்மையாகக் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளது. மேற்படி அறிக்கையில், "வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போது செம்மணியில் கிருஷாந்தி, ரஜனி, மன்னாரில் காமலிற்றா, அம்பாறையில் கோணேஸ்வரி, கொழும்பு மட்டக்குளியில் றீற்றா யோண் போன்றோரின் கொடூர பாலியல் வன்முறையும் கொலையும் தாய்க்குலத்திற்கே இழிவுதேடும் ஓர் அனாகரீகச் செயலாகும். அது மாத்திரமல்ல,

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

# அருமைநாயகம் அடிகள் திடீர் மரணம்



- ஆயரும் குருக்களும் அதிர்ச்சி
- யாழ் மறைமாவட்டம் சோகத்தில்

அருள்திரு E. J. அருமைநாயகம் அவர்கள் 23.01.2000 அன்று திடீரென்று காலமானார் என்ற செய்தியை சோகத்துடன் 'பாதுகாவலன்' வெளியிடுகிறது. யாழ் ஆயரின் செயலராக பணியாற்றிய இவர் திடீரென்று நோயுற்று 10 நாட்கள் மயக்க நிலையில் இருந்து காலமானார். முன்னாள் அச்சக அதிபராகவும் 'பாதுகாவலன்' ஆசிரியராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

இறுதி நாட்களில் கடும் நோய்வாய்ப்பட்டு பத்து நாட்கள் கோமா நிலையில் இருந்தபின் 23.01.2000 அன்று இறைபதமடைந்தார். அவரது நல்லடக்கம் 24.01.2000 அன்று ஆயர் தலைமையில் நடைபெற்றது. பெருந்தொகையான குருக்கள், விசுவாசிகள் அவரது இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டனர். அவர் பணியாற்றிய பணித்தளங்களில் இருந்தும் அனேகமானோர் வந்து அஞ்சலி செலுத்தினர்.

அவருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக புனித வளன் அச்சகம் அன்று அரைநேரத்துடன் மூடப்பட்டது.

## வன்னியில் மக்கள் பெரிதும் துன்புறுகின்றனர்

அண்மையில் கிளி-முல்லை மறைக்கோட்டத்திற்கும் மடுவிற்கும் சென்று திரும்பிய யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அண்டகை மேற்கண்டவாறு பாதுகாவலன் பத்திரிகைக்கு கருத்துத் தெரிவித்தார்.

"வன்னியில் மக்கள் இன்னும் பெரிதும் துன்புறுகின்றனர். அவர்களின் அன்றாட தேவைகள் நிறைவாகக் கிடைக்கின்றன என்று சொல்ல முடியாது. யுத்தத்தின் வடுக்களை காணக்கூடியதாக இருக்கிறது. வீதியோரங்களிலுள்ள மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு, வீடுகள் இடிக்கப்பட்டு, வீதிகளும் அழிந்த நிலையில் கிடக்கின்றன.

மக்கள் மீளக்குடியமர்ந்திருந்த போதிலும் இயல்பு நிலை திரும்பவில்லை வன்னிக்கு ஒழுங்காக உணவுப் பொருள்கள் அனுப்பப்படாததால் அங்கு உணவு, மண்ணெண்ணை ஆகியவற்றிற்கு தட்டுப்பாடு நிலவுகின்றது" என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கும்போது "குருக்களின் பணி அங்கு சிறப்பாகவுள்ளது. துன்பத்தின் மத்தியிலும்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## அருட்தந்தை அருமைநாயகத்தின் வாழ்க்கை வரலாறு

அருமைநாயகம் அடிகளார் 1954 சித்திரை 03ஆம் நாள் சுருவிலைச் சேர்ந்த திரு. இம்மானுவேல் றோஸ்முத்து தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். இவருக்கு இரு சகோதரரும் இரு சகோதரிகளும் உள்ளனர். இவர் தமது ஆரம்பக் கல்வியை சுருவில் புனித மரியாள் ஆரம்பப் பாடசாலையிலும், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும், உயர் கல்வியைப் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.

கிறிஸ்துவின் குருவாகும் அழைப்பைப் பெற்று 1965ஆம் ஆண்டு புனித மடுத்தீனார் குருமடத்திற் சேர்ந்தார். குருத்துவப் பயிற்சியின்போது தமது மெய்யியற் கல்வியை திருச்சி புனித சின்னப்பர் குருத்துவக் கல்லூரியிலும் இறையியற் கல்வியை கண்டி தேசிய குருமடத்திலும் பெற்றுக்கொண்டார்.

1979 ஆடி 20ஆம் நாள் ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகையால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். அன்று தொடங்கி தமது இறுதி [illegible] ஆழமான விசுவாசம், நம்பிக்கை, அன்பு கொண்டவராய் தளராத மனதோடு தமது குருத்துவப் பணியைத் தொடர்ந்தார்.

புதிய குரவர் 1979இல் இளவாலையிலும், யாழ் அடைக்கல அன்னை ஆலயத்திலும் உதவிக் குருவாகப் பணியாற்றினார். பின்னர் அடைக்கல அன்னை ஆலயத்தில் பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டார். புனித சவேரியார் குருமடத்தின் தொடக்க காலத்தில் உதவியாளராகவும், திருமறைக் கலாமன்றத்தின் உதவி இயக்குனராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

1986இல் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தைப் பொறுப்பேற்ற இவர் 1992 வரை அதன் நிர்வாகியாகவும் 'பாதுகாவலன்' பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்துவந்தார். 1988இல் புனித மடுத்தீனார் குருமட அதிபராக நியமனம் பெற்றார். இவரால் உருவாக்கம் பெற்ற பலர் இன்று குருக்களாக விளங்குகின்றார்கள்.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## கிறிஸ்துவில் உதயமாகும் மூன்றாவது மிலேனியம்

நத்தார் திருவிழிப்பாகிய டிசம்பர் 24ஆம் திகதியன்று திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் புனித பேதுரு பேராலயத்தின் புனித வாயிலைத் திறந்து வைத்து மாபெரும் யூபிலி ஆண்டினை ஆரம்பித்துவைத்தார். மலர்களால் அலங்கரிக்கப்பட்ட வாயிலினூடாக ஒளிவெள்ளத்தில் ஆலயத்துட் பிரவேசித்த திருத்தந்தை அங்கு கூடியிருந்த திரளான மக்களுடன் திருப்பலி ஒப்புக்கொடுத்தர்.

அன்று அவர் ஆற்றிய திருவுரையில் "இன்று எங்களுக்கு ஒரு மீட்பர் பிறந்துள்ளார். 20 நூற்றாண்டுகளாக திருச்சபையின் இதயத்திலிருந்து பிறந்த இந்த மகிழ்ச்சிகரமான செய்தி இந்த மிலேனியத்தின் இறுதியில் வாழும் எங்களுக்கு மீண்டும் கூறப்படுகிறது. இன்று கிறிஸ்து பிறப்பின் நினைவு நாளை மட்டுமல்ல மாபெரும் யூபிலியின் ஆரம்பத்தையும் கொண்டாடுகிறோம். நித்திய தந்தையின் மகன் மனித இயல்பு பூண்டு காலத்தில், மனிதனான. அந்த உன்னத வேளையுடன் நாமும் இணைந்துள்ளோம்.

நித்தியத்தை வரலாற்றுடன் இணைக்கும் அந்த அன்புச் செயலுக்கு நாம் [illegible]

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## எம் கருத்து

### சமாதானம் ஏற்பட வழியுண்டா?

சமாதானம் என்ற ஒளி எப்போது உதிக்கும் என்ற தமிழ் மக்களின் நீண்டகால ஏக்கம் புத்தாண்டு புலர்கையில் புதுத்துளிர் விடுவதும் பின் மெல்லக் கருகி விடுவதும் கடந்த பல வருடங்களின் அனுபவமாகிவிட்டது.

யூபிலி ஆண்டு மில்லேனியம் ஆண்டு புத்தாயிரம் ஆண்டு எனப் பல பெயர்களால் வர்ணிக்கப்படும் இவ்வாண்டின் சரித்திர முக்கியத்துவமும் நாட்டின் அரசியல் நிலையும், ஜனாதிபதித் தேர்தலும் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளும் அவற்றின் விளைவுகளும் சமாதானத்திற்கான ஏக்கத்தை மேலும் அதிகரித்துள்ளன.

இன்றைய நிலையில் சமாதானம் ஏற்படுவது சாத்தியமா? என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழுகின்றது. இக்கேள்விக்கு நம்பிக்கையுடன் கூடிய பதிலை அளிக்கத் தயங்க வேண்டியிருக்கின்றது. ஆனால் கட்டாயம் ஒரு சமாதான நிலை ஏற்பட வேண்டும். இல்லாவிட்டால் நாட்டின் அழிவுக்கே வழிகோலும் என்பதை பலரும் உணர்ந்து வருவதாகத் தெரிகிறது. பேராயர் தமது செய்தியில் எமது நாடு சகல விதமான வன்முறைகள் ஊழல்களிலிருந்து தன்னைச் சுத்திகரிக்க உறுதிகொண்டாலொழிய அது உயிர் பிழைக்க முடியாது எனக் கூறியுள்ளார்.

நாட்டுப்பற்றிற்கும் மனித நேயத்திற்கும் மேலாக சுயலாபத்தையும் கட்சிப்பற்றையும் இன்னும் எவரும் கருதுவார்களேயானால் எமது நாடு தான் சென்றுகொண்டிருக்கும் அழிவுப் பாதையிலிருந்து மீள்வது அரிது.

சமாதானத்தை ஏற்படுத்துவதில் முன்னின்று செயற்பட வேண்டியது அரசுதான். இதனை வலியுறுத்தவே யாழ் ஆயர் தமது புத்தாண்டுச் செய்தியில் "செயல்முறை சாத்தியமான நடவடிக்கைகளில் துணிவாக இறங்கி, எந்த எதிர்ப்பு வந்தாலும் அதனை எதிர்கொண்டு இலங்கைவாழ் தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சனைக்கு ஒரு நிரந்தர முடிவுகாண ஜனாதிபதி முன்வரவேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளார். இதனை யாழ் பத்திரிகையான உதயனும் தனது ஆசிரியத் தலையங்கத்தில் (04.01.2000) வலியுறுத்தியுள்ளது.

'திட்டவட்டமான செயற்பாடுகளை அரசு மேற்கொள்ளத் துணிந்தால் எதிர்ப்புகள் இருந்தபோதிலும் நல்லெண்ணமுடைய சகல தரப்பினருடைய ஒத்துழைப்பையும் அது பெற்றுக்கொள்ள முடியும்.

மக்கள் நிலையிலும் மாற்றம் தேவைப்படுகிறது. "கொடூரமான நீண்டகாலப் போரினால் மக்கள் இதயக் கதவுகள் இறுக்கமடைந்து மூடப்பட்டிருப்பினும் அவை திறக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது" என்ற மன்னார் ஆயரின் கூற்றும் நோக்கற்பாலது. என்ன நடந்தது என்பதை மீள அசைபோட்டு பகைமையை வளர்ப்பதை விட, இனி என்ன நடக்கவேண்டும் என்ற புதிய சிந்தனையுடன் புதிய நூற்றாண்டை ஆரம்பிக்க அனைவரும் முன்வருவார்களாக.

# பணி அரும்புகள்

'மறை வளர தமிழ் வளர்ப்போம்' என்னும் விருதுவாக்கோடு கொழும்புத்துறை புனித சவேரியார் குருமடத்தில் இயங்கும் மன்றம்தான் தனிநாயகம் தமிழ் மன்றம். தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக அரும்பணியாற்றி 'தமிழ்த் தூது' என்னும் பட்டம் சூட்டப்பட்டு மறைந்த தனிநாயகம் அடிகளாருடைய பெயரில் இம்மன்றம் இயங்குவது மிகப் பொருத்தமானதே.

குருத்துவப் பணிக்காகத் தம்மை உருவாக்கிக் கொண்டிருக்கும் அருட்சகோதரர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட இம்மன்றம், தமிழ்க் கத்தோலிக்க மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்று விளங்கும் பாதுகாவலன் இதழ் வழியாக 'பணி அரும்புகள்' என்னும் தலைப்பில் மக்களோடு தொடர்பு கொண்டு 'தமிழ் வளர்த்து மறைபரப்ப எடுக்கும் முயற்சியே இப்பகுதியாகும்.

இப்பகுதியில் வெளியாகும் ஆக்கங்கள் அனைத்துக்கும் தமிழ் மன்றமே பொறுப்பாக இருக்கும். அத்துடன் தரமான ஆக்கங்கள் வழியாக இப்பகுதியைச் சிறப்பிக்க இம்மன்றம் எப்போதும் முயற்சி எடுக்கும்.

இப்பகுதி பற்றி வாசகர்களாகிய உங்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் விமர்சனங்களையும் வரவேற்கின்றோம். 'பணி அரும்புகள்' ஒரு சுவையான போட்டியோடு உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறது.

அருள்திரு ப. யோ. ஜெபரட்ணம்
இயக்குநர்

## போட்டி ! போட்டி ! போட்டி !

### 20ஆம் நூற்றாண்டின் ஆன்மீக நட்சத்திரம் யார்? உங்கள் வாக்கு யாருக்கு?

### 2ஆம் அருள் சின்னப்பர்

1920ஆம் ஆண்டு வைகாசி 18ஆம் திகதி பிறந்த இவர் 'கறோல் வெயிற்றிலா' என்னும் இயற்பெயரை கொண்டவர். போலந்து நாட்டைச் சேர்ந்தவர். திருச்சபையின் 263வது பாப்புவாக 1979ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டார். இவரை 'பயணம் செய்யும் பாப்பு' எனப் பலரும் அழைப்பர். இதுவரை 89 நாடுகள் பயணம் மேற்கொண்டு 200 கோடிக்கு மேற்பட்ட மக்களைத் தரிசித்துள்ளார்.

### அன்னை திரேசா

இவர் 1910ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26ஆம் திகதி பிறந்தார். பெற்றோர் இட்ட பெயர் 'ஆக்னஸ் கொன்சா'. தந்தை பெயர் நிக்கலோ. தாயின் பெயர் டிரானபில். இவரது மொழி அல்பீனிய மொழி. 1931இல் கன்னியர் மடம் சேர்ந்து 'திரேசா' என்று பெயரை மாற்றிக்கொண்டார். 1937இல் நித்திய வார்த்தைப்பாடு எடுத்தார். 31 ஆண்டுகள் கல்கத்தாவின் சேரிகளில் பணி புரிந்தார். 1997 செப்ரெம்பர் 05ஆம் திகதி இறையடி சேர்ந்தார்.

### சுவாமி ஞானப்பிரகாசர்

1875ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30இல் இந்துப் பெற்றோரிடம் இவர் பிறந்தார். தந்தையார் இறந்ததும் தாயார் கிறீஸ்தவர் ஒருவரை மறுமணம் செய்து தானும் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றத் தொடங்கினார். தாயும் மகனும் ஒரேநாளில் அருட்திரு சி. எச். லிற்றன் அ.ம.தி. அடிகளாரால் திருமுழுக்குப் பெற்றனர். பின் ஞானப்பிரகாசர் புனித பத்திரிசியார் கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்றார். அருட்திரு சாள்ஸ் கொலின் அ.ம.தி. அவர்களின் ஊக்கத்தினால் அ.ம.தி. சபையில் சேர்ந்து 1901 மார்கழி 01ஆம் திகதி குருவானார். ஓர் நற்போதகனாக, எழுத்தாளனாக, மொழி வல்லுனராக, வரலாற்றாசிரியராக, மறைபணியாளனாக, இயேசுவின் நற்குருவாக வாழ்ந்து மரித்தார்.

**குறிப்பு:** 20ஆம் நூற்றாண்டில் எமது விசுவாச வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த ஆன்மீக நட்சத்திரங்களில் முக்கியமான பத்துப்பேரை இப்பகுதியில் தொடர்ந்து அறிமுகப்படுத்தி வருவோம். இவர்களில் மூவரைப் பற்றிய விபரங்களை இவ்விதழில் அறிமுகம் செய்துள்ளோம். எல்லா நட்சத்திரங்களும் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் நீங்கள் உங்கள் வாக்குகளை அளிக்கலாம். வாக்களிக்கும் முறை, பரிசு பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

## அருட்தந்தை தோமஸ் அ.ம.தி. அடிகளாரின் விண்ணகப் பிறப்பின் 36வது வருட நினைவு தினம். 26.01.1964 - 26.01.2000

## செபமாலை மாதா சபைக் கன்னியருக்குரிய சாட்சிய வாழ்வு

இற்றைக்கு 2000 ஆண்டுகள் கடந்த பின்னும் இறைவனின் இருப்பை ஏற்காதோர் பலர். அவர் இருப்பை ஏற்றாலும் தம் வாழ்வில் அவருக்குரிய இடத்தை மகிமையைக் கொடுக்காதோர் அநேகர். மனச்சாட்சியில் இறைவார்த்தையில் அவரது குரலைக் கேட்க மறுத்துப் புறக்கணிப்போர் இன்னும் அநேகர். சக மனிதனைப் பகைத்து பொய்மை, உடல், உள மானசீக சித்திரவதை, அடக்குமுறை உரிமை மறுக்கப்படல் போன்றவற்றால் சிறுமைப் படுத்தித் துன்புறுத்திச் செய்யப்படும் பாவங்கள் எண்ணிலடங்காதவை. ஊனியல்பின் இச்சைகளில் மனக்கட்டுப்பாடின்மையால் ஒருவரொருவரது வாழ்வை களங்கப்படுத்துடம் நிலை ஏராளம். இவற்றால் மனிதர் விசுவாசத்தை, அக அமைதியை, அன்புறவை இழந்து நிற்பதால் தம் அன்பு மகனின் இதயம் வேதனையுறுவதை அன்னை மரியாள் பலமுறை வெளிப்படுத்தியுள்ளார்.

அந்த அன்னை லூர்துபதியிலும் பாத்திமா பதியிலும் கொடுத்த செய்திகளுக்கு ஆழ்ந்து செவிமடுத்துப் பதிலிறுத்தவர்களுள் அருட்தந்தை தோமஸ் அடிகள் முக்கியமான ஒருவர். மக்கள் மனம் மாறும்படி செபமும் தபமும் பரிகாரமும் செய்யும்படி கேட்ட மரியன்னையின் வேண்டுகோளை நிறைவேற்றும் முயற்சியில் தமது சிறிய பங்களிப்பாக செபமாலை மாதா இறையனுபவ சபையை 1928ஆம் ஆண்டு தோலகட்டி என்னும் குக்கிராமத்தில் ஆண்களுக்கும் 1948ஆம் ஆண்டு வசாவிளானில் பெண்களுக்கும் ஆரம்பித்தார். பல கண்டனங்கள், எதிர்ப்புகள் மத்தியிலும் தூய ஆவியானவருடைய வல்லமையால் துளிர்விட்ட செபமாலை மாதா கன்னியர் சபை யாழ் மறைமாவட்டத்தில் மாத்திரமல்ல, இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலும் அயல்நாடான இந்தியாவிலும் படர்ந்து விரிந்து கிளை பரப்பியுள்ளது. தற்போது 14 மடங்களில் எம் சபையினர் இறையனுபவ வாழ்வின் வழி செப அப்போஸ்தலராக பணியாற்றுகின்றனர்.(CONTEMPLATIVES)

அன்று பற்பல இடங்களில் பல்வேறு முறைகளில் வேண்டுகோள் விடுத்த மரியன்னை இந்நாட்களிலும் மஜகோரி என்னும் இடத்தில் காட்சி தந்து வெளிப்படுத்திய செய்திகளுக்குச் செவி கொடுப்போம்.

"அன்புக் குழந்தைகளே இறைவன் உங்கள் மூலம் பணிபுரிவதற்கு நீங்கள் அவருக்கு உங்கள் இதயங்களை நேர்மையோடு திறந்து வையுங்கள். எவ்வளவுக்கு அதிகமாக உங்கள் இதயங்களைத் திறந்து வைப்பீர்களோ அவ்வளவுக்கு அதிகமாகப் பயன் பெறுவீர்கள். நீங்கள் இதுவரை செய்த தியாகங்களுக்காக உங்களுக்கு நான் நன்றி சொல்ல விரும்புகிறேன். இப்போது மிகப்பெரிய தியாகங்களுக்காக உங்களை அழைக்கிறேன். அது அன்பின் தியாகம். அன்பின்றி நீங்கள் என்னையோ என் திருமகனையோ ஏற்றுக்கொள்ள முடியாது. எனவேதான் உங்கள் இதயங்களை அன்பினால் நிரப்பும்படி கேட்கிறேன்.

என் அன்புக் குழந்தைகளே செபத்தின் மூலம் எந்தப் போரையும் நிறுத்தலாம். இயற்கைச் சட்டங்களின் போக்கையும் மாற்றியமைக்கலாம் என்பதை மறந்து விட்டீர்கள்[illegible] செபமாலை ஏந்தி நில்லுங்கள். தியானத்தோடு செபம் செய்யுங்கள். நான் உங்களுக்குச் சொல்ல விரும்பும் வார்த்தை மனந்திரும்புங்கள் என்பதே".

எம் அன்பு அன்னையாம் மரியன்னையின் வேண்டுகோளை நாம் நிறைவேற்ற வேண்டுமானால் மனம் மாறியவர்களாக உலகினரின் பாவங்களுக்கெல்லாம் பரிகாரமாக இறைபிரசன்ன உணர்வில் நிலைத்திருந்து எமது அனைத்துத் தேவைகளிலும் செயற்பாடுகளிலும் அவருக்கே முன்னுரிமை கொடுத்து என்ன நேர்ந்தாலும் அவரிலே சரணடைந்தவர்களாக அவரது தந்தைக்குரிய பராமரிப்பை எண்ணி போற்றிப் புகழ்ந்து மகிமைப்படுத்தி எல்லா மக்கள் பெயராலும் அவரை உள்ளன்போடு ஆராதிப்பதன் மூலமும் குழும வாழ்வில் அன்றாடம் சந்திக்கும் நிகழ்வுகள், உடல், உள, மனக் கஸ்டங்கள், நோய்கள், வயோதிபம், இயலாமைகள், வரையறைகள், பலவீனங்கள், பொறுப்புள்ள பணிகள் அனைத்தையும் புனிதப்படுத்தும் தூய ஆவியின் செயற்பாட்டுக்குள் அர்ப்பணித்து வாழ்தலே எம் பரிகார வாழ்வாகும். இதனால் தம்மைத் தொடர்ச்சியாகத் தந்தைக்கு அன்பின் பரிகாரப் பலியாக அர்ப்பணித்துக்கொண்டிருக்கும் யேசுவை ஒத்தவர்களாய் சாட்சிகளாய் வாழமுடியும். தூய அன்பு ஒன்றே அனைத்தையும் பரிகார முயற்சியாக மாற்றுகின்றது. எனவே எமது சபை நிறுவுனர் அருட்திரு தோமஸ் அடிகளார் கூறியிருப்பது போல் எம் ஒவ்வொரு இதயத் துடிப்பையும் விடுகின்ற ஒவ்வொரு மூச்சையும் அன்பின் பரிகாரமாக மாற்றுவோம்.

செபமாலைக் கன்னியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில உலக அர்ப்பண வாழ்வினரின் யூபிலி தினம் (மாசி 02)

## யாழ் மறைமாவட்ட துறவியரின் ஒன்றுகூடல் (30.01.2000 - 02.02.2000)

### யாழ் மாகாண அமதிகள் தலைவரின் வாழ்த்து

புலர்ந்திருக்கும் புத்தாயிரம் ஆண்டு இரண்டாயிரம், இறைமக்கள் யாவருக்கும் ஒரு மாபெரும் யூபிலி விழாவாகும். திருத்தந்தையின் நிகழ்வுத் திட்டத்தில் மாசித் திங்கள் இரண்டாம் நாளை துறவியருக்கென அர்ப்பணித்துள்ளார். இந்நாளில் யாழ் மறைமாவட்டத் துறவியர் குழுவாக இணைந்து அனுசரிப்பது ஒரு தகுதியும் நீதியுமான செயலாகும்.

இவர்கள் மேற்கொள்ளவிருக்கும் யூபிலி யாத்திரையும், தம்மைப் புதுப்பித்தலுக்கென தமக்குள் செய்துகொள்ளும் ஆன்மீக யாத்திரையான திரிதின ஆயத்தமும் இறைமகன் இயேசுவின் மீட்பை தம் வாழ்வில் அனுபவிக்கும் அரிய சந்தர்ப்பமாக அமையட்டும்.

நிலைவாழ்வைத் தம் கதியாக நோக்கி தியாக சிந்தையுடன் பயணித்துவரும் ஒவ்வொரு துறவியும் இறைஅழைப்பின் குரலுக்கு அனுதினம் செவிமடுத்து தகுந்த பதில் அளிப்பது தற்காலத்துச் சூழலில் மிகவும் சவால் கொண்ட முயற்சியாகும். மீட்புப் பயணம் ஒரு சிலுவை வழி என்பதனால் அதை வாழ்ந்து காட்டிய கிறீஸ்து நம்பிக்கையின் தாரகையாக விளங்குகிறார். அவரது அடிச்சுவட்டிலேயே வாழ்ந்த மரியன்னையும் தன் மகன் இயேசுவோடு தன்னையும் அர்ப்பணித்தவள் எல்லாத் துறவியருக்கும் பரிந்துரைக்கும் தாயாக விளங்குகிறாள். போரின் சுமைகளால் அல்லல்படும் தமிழ் மக்களிடையே துறவியர் மீட்புப் பயணத்தை முன்னெடுத்துச் செல்ல அவர்களது வாழ்வும் பணியும் தனித்தனியாக இயக்கம் பெறமுடியாது. எனவே தமக்குள்ளும் மக்களுடன் ஏற்படுத்தும் கூட்டு வாழ்வினாலேயே பொருள் பொதிந்த ஒரு மீட்புப் பயணத்தை நிஜமாக்க முடியும்.

நான் என்றும் உங்களோடு என்று நினைவூட்டும் இறையேசுவின் நற்கருணைப் பிரசன்னம் துறவியரை இணைத்து பணிக்கென அனுப்பிவைக்கும் ஊற்றும் உறைவிடமுமாக இருக்க எனது செபநிறை வாழ்த்துக்கள்.

அருள்திரு அ. ஜீவேந்திரா போல் அ.ம.தி

### யாழ் ஆயரின் வாழ்த்துச் செய்தி

யூபிலி புதுப்பித்தலின் ஆண்டாகும். இவ்வாண்டில் அர்ப்பண வாழ்வு வாழ்கின்ற அனைவரும் தம் அர்ப்பணத்தைப் புதுப்பித்து முதிர்ச்சி காணவும் பிரமாணிக்கமான அர்ப்பண வாழ்வு வாழவும் அழைக்கப்படுகின்றனர்.

அகில உலக அர்ப்பண வாழ்வினரின் யூபிலி தினத்தில் யாழ் மறைமாவட்டத்தில் அர்ப்பண வாழ்வு வாழும் துறவியர் அனைவரையும் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

யூபிலி ஆண்டில் சிறப்புத் தினங்களைக் கொண்டாடும்படி திருத்தந்தை அழைப்பு விடுத்த தற்கிணங்க அவர்கள் இத்தினத்தைச் சிறப்பாக நினைவுகூருவதும் கொண்டாடுவதும் வரவேற்கத் தக்கதே. பாதுகாவலன் பத்திரிகையில் யாழ் மறைமாவட்டத் துறவிகள் அனைவரும் இணைந்து தத்தமது சபையின் வரலாற்றினையும் வளர்ச்சியினையும் அலசிப் பார்ப்பது, இன்னும் அனேக மானவர்கள் அர்ப்பண வாழ்வில் இணைந்துகொள்ள அழைப்பு விடுப்பதும், யாழ் திருச்சபையின் வளர்ச்சிக்குப் பெரும் துணைபுரியுமென நம்புகின்றோம். அர்ப்பண வாழ்வினரின் தினமாகிய மாசி மாதம் 02ஆம் திகதியினை சிறப்பான விதமாகக் கொண்டாட பாதுகாவலனில் சிறப்பு இதழ் வெளியிட்டு மூன்று ஆயத்த தினங்களில் தொடர் உரைகளையும் நற்கருணை வழிபாடுகளையும் நடத்துவதை பாராட்டுகிறோம். இவ்வுதாரணத்தை மற்றைய தினங்களைக் கொண்டாட இருப்பவர்களும் பின்பற்ற வேண்டுமென விரும்புகின்றோம்.

† இ. தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ் ஆயர்.

### குரு முதல்வரின் ஆசிச் செய்தி

எமது மறைமாவட்டத்திலும் இந்நிகழ்வு உத்வேகத்துடன் இடம்பெறுகிறது. இத்தருணத்தில் யாழ் மறைமாவட்ட குருக்கள் சமூகத்தின் சார்பாக இவர்களை உளமார வாழ்த்தி அவர்களுடன் இணைந்து இறைவனுக்கு நன்றிகூறி நிற்கிறோம்.

எமது மறைமாவட்டம் ஆரம்பத்திலிருந்தே அமல மரித் தியாகிகளினதும், திருக்குடும்பக் கன்னியருடையதும் அயராத பணியில் கட்டி எழுப்பப்பட்டது என்பதை எல்லோரும் அறிவர். கால ஓட்டத்தில் இங்கு பணிசெய்த ஆயர்களின் விடாமுயற்சியால் இன்று பன்னிரண்டு துறவற சபைகள் வளர்ந்து எம்முடன் இணைந்து பெரும் பணியாற்றுவது எமக்குக் கிடைத்த பெரும்பேறு என்று நன்றி உணர்வுடன் மகிழ்கிறோம்.

இடம்பெற இருக்கும் திரிதின செப தியானத்தினால் சிறந்த நற்பயனும் ஆன்மீக நிறைவளமும் பெற ஆசி கூறி இவர்களின் தொகை பெருக, புனிதநிலை உயர, பணிகள் சிறக்க, இவை மூலம் யாழ் திருச்சபை அருள் வளம் நிரம்பப்பெற இவர்களோடு இணைந்து பிரார்த்திக்கின்றோம்.

தேவ அழைத்தல்கள் மிகுதியாக, குருத்துவ துறவற நிலைகள் எல்லோருக்கும் கிடைக்க உருக்கமாக இறைவனை வேண்டி நிற்கிறோம்.

அருள்திரு ஜே. பி. இ. செல்வராஜா
மறைமாவட்டக் குருமுதல்வர்.

### அமல மரித் தியாகிகள் சபை

புனித யூஜின் டி மசனொட் ஆயரினால் 'ஏழைகளுக்கு நற்செய்தி சொல்ல' என்ற விருதுவாக்கை உள்ளுயிராகக் கொண்டு அமலமரித் தியாகிகள் குடும்பம் 1826ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு சுமார் 175 ஆண்டுகளாக பணியாற்றி வருகின்றது. பிரான்சியப் புரட்சியின் பின்னனியில் கருவாகி உருவாகி உலகளாவிய ரீதியில் இன்று ஏறக்குறைய 68 நாடுகளில் கிட்டத்தட்ட 5000 அமலமரித் தியாகிகள் பணிபுரிந்து வருகின்றனர்.

வறியவர்கள், அகதிகள், அனாதைகள், உடல் உள நோயாளர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், உரிமைவாழ்வு இழந்தவர்கள் எனப்பலர் ஏழைகளாக 'பல முகங்களோடு' வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் அருள்தரும் ஆண்டிற்காகக் காத்துக் கிடக்கின்றார்கள். எனவேதான் "ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்க அவர் என்னை அனுப்பினார்" (லூக். 4:19) என்ற இயேசுவின் பணிவாழ்வினை எமது குழுமத்தின் உயிர் நாடியாகக் கொண்டுள்ளோம்.

ஆகவேதான், இறைவார்த்தையை எடுத்துரைத்தல், ஞான ஒடுக்கங்களை நடத்துதல், உடல் உள நோய்களை ஆற்றுப்படுத்துதல், அனாதைப் பிள்ளைகளை ஆதரித்தல், இடம்பெயர்ந்த மக்களுக்கான உதவிகள், அத்தோடு பங்குப் பணிகள் போன்ற பலதரப்பட்ட பனிகளிலே எமது பணியாளர்கள் காலத்தின் தேவைகளைக் கருத்தில் கொண்டு பணியாற்றி வருகின்றனர்.

### திருச்சிலுவைக் கன்னியர்

எங்கும் போரும் அநீதியும் அடக்குமுறையும் நிறைந்து மனிதன் முழுமனித சுதந்திரத்தோடு வாழமுடியாத நிலையே காணப்படுகிறது. மனித மாண்புகள் நசுக்கப்பட்டு, அடக்கி ஒடுக்கப்பட்டு, அன்பு தேடி, அமைதி தேடி, மக்கள் நாளும் அலைந்து திரிகின்றனர். இந்தச் சூழலில் "இன்றைய தேவையே இறைவனின் சித்தம்" என்ற எமது ஸ்தாபகரின் தரிசன வீச்சுக் கொண்டு விருதுவாக்கிற்கேற்ப சூழலுக்கேற்ற பணிபுரிந்து வாழக் கிடைக்கும் எம் அழைப்பு உண்மையில் மனநிறைவு தருவதே.

தோற்றமும் வளர்ச்சியும் : 1844ஆம் ஆண்டு சுவிற்சர்லாந்து நாட்டில் அருட்தந்தை நிலோடோசியஸ் O.F.M. அடிகளாரால் எமது சபை ஆரம்பிக்கப்பட்டது. அவர் அருட்சகோதரி பேர்ணாவுடன் இணைந்து நற்செய்திக்கும் உலகிற்கும் இடையேயுள்ள இடைவெளியை நிரப்ப முனைந்து நின்றார். இவர்களது முயற்சியின் பயனாகிய எமது சபை இன்று உலகின் பல்வேறு திசைகளுக்கும் பரவி பணிவாழ்வின் மூலம் மீட்பின் ஒளியை பிரகாசிக்கச் செய்ய முயன்று நிற்கிறது.

நோக்கம் : இறைவனுக்கும் எமக்கும் உள்ள நெருங்கிய உறவின் மூலம் மனிதனை முழு மனிதனாக உருவாக்குவதே திருச்சிலுவைக் கன்னியரின் முக்கிய இலக்காகும். சிலுவையில்தான் இரட்சணியம் என்ற நம்பிக்கையில் நாம் ஊன்றி, பணிவாழ்வின் மூலம் ஏனையோரையும் அதே நம்பிக்கையில் திடப்படுத்த விளைந்து நிற்கின்றோம்.

பணிகள் : ஒரு மனிதனின் கருவறை முதல் கல்லறைவரை அவனது துன்பத்தின் கணங்களிலே இறைவனின் இரக்கத்தின் கரங்கள் துணைநிற்கின்றன என்பதை எமது பணிகளால் நாம் உணர்த்த விரும்புகின்றோம்.

- குணமாக்கும் பணிகள்
- நடமாடும் வைத்தியசேவை
- முதியோரைப் பராமரிப்பது
- நல் மரணத்துக்கு ஆயத்தம் செய்வது
- சிறுவரை பராமரிப்பது
- கல்வி, மறைக்கல்வி ஊட்டுவது
- இளையோருக்கான சுயதொழில் வாய்ப்பு
- இல்லத் தரிசிப்பு, பங்குத் திருப்பணிகள்

இவ்வாறு எமது சபையின் பணிகள் பரந்து செல்கின்றது.

அர்ப்பணம் : ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிவு என்ற வாக்குறுதிகளால் பணி வாழ்வுக்கும் எம்மை அர்ப்பணித்து சிலுவையின் வழிதான் மீட்பு என்ற பாஸ்கா மறைபொருளுக்கு வாழும் சாட்சிகளாக வாழ முயன்று வருகிறோம்.

### செபமாலைக் கன்னியர்

தம்மையே தந்தைக்கு தொடர்பாக அன்பின் பரிகாரப் பலியாக அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் இயேசுவின் அன்புக்கு சாட்சியம் பகர்வதே செபமாலைக் கன்னியர் சபையின் தனிவரமாகும். தொடர்பான செபமும் இரவு பகல் நற்கருணை ஆராதனை, மனமுவந்தேற்கும் தபமும் இறை ஒன்றிப்புக்கு உதவியான மௌனமும் அதிக சமூகத் தொடர்பற்ற மறைந்த மடஅடைப்பு வாழ்வு, நசரேத்தின் திருக்குடும்பத்தின் எளிமையானதும் எவ்வித பாகுபாடோ ஏற்றத்தாழ்வோ அற்ற சமத்துவம் பேணும் சகோதரத்துவ குழும வாழ்வு செபமாலைக் கன்னியருக்குரியது.

யூபிலி நாயகனாகிய யேசு நேற்றும் இன்றும் என்றுமே மாறாதவராகத் தம் மனுக்குலத்தோடு இருக்கின்றார். தந்தையை நோக்கிய பயணத்தில் யேசு ஒளியாக உண்மையாக விளங்குகிறார். மனித குலத்தை மீட்க வந்த கிறிஸ்துவின் விடுதலைப்பணி மீட்கும் பணியைப் பெற மக்களின் மனங்கள் இன்னும் பண்படுத்தப்படாதபடியால் யேசுவின் பரிந்துரைச் செபங்களோடு ஒன்றிணைந்து தொடர்பாக இறைபுகழ்ச்சியை செபமாலைக் கன்னியராகிய நாம் அளிக்கின்றோம்.

ஆயுதம் ஏந்தி மக்களை மீட்கும் பணியை முன்னெடுக்கும் இக்கால கட்டத்தில் செபமாலை ஆயுதத்தை தாங்கி சாத்தானின் கெடுபிடிகளால் அலைக்கழிக்கப்படுகின்ற மனுக்குலத்தை இறைவனை நோக்கிய பயணத்தில் அவரிடம் ஈர்த்துக் கொண்டுவர எம் வாழ்வை செபமாலைக் கன்னியராகிய நாம் அர்ப்பணிக்கின்றோம். மறைவான இவ் அப்போஸ்தலத்துவம் மின் சக்தி நிலையமாக இருந்து வெளி அப்போஸ்தலத்துவத்தை இயக்குகின்றது. இறையருளை இடையறாது உலகத்துக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இறைவனின் நிபந்தனையற்ற அன்பு வாழ்வை தம் குழுவில் வாழ்வதன் வழியாகவும் சாட்சிகளாக விளங்குகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளரீசியன் சபை

CMF 1849 1999

19ஆம் நூற்றாண்டு ஐரோப்பிய வரலாற்றிலே ஒரு கிளர்ச்சி பரம்பிய காலம். மாவீரன் நெப்போலியன் ஐரோப்பாவையே கலக்கி எடுத்த நேரம். எங்கும் போர் முழக்கம். அமைதி என்னும் ஆதவன் எங்கோ ஓடி மறைவிடம் தேடிக்கொண்ட நேரம். மக்களோ வாடினர். அமைதி தேடி ஏங்கினர். இந்தச் சூழலில்தான் சமூகத்திற்கு ஒளியேற்ற கிளாரட் தன்னோடு ஐந்து குருக்களுடன் சேர்ந்து 1849ஆம் ஆண்டு யூலை 16ஆம் நாள் "அமல மரியின் இருதய மைந்தர்கள்" என்ற பெயரில் சபையை ஆரம்பித்தார். இந்தச் சபையானது கிளாரட்டின் பாதச் சுவட்டில் பயணித்து சகல வசதிகளையும் வளங்களையும் நபர்கள், நேரங்கள், தளங்கள் ஆகியவற்றை நெறிப்படுத்தி எதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமோ அதற்கு உடனடியாக நேரக்கணிப்புடன் சக்திமிகு செயலூக்கத்துடன் தெளிந்த மன உறுதியுடன் உரம் ஊட்டி அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட ஏழைமக்கள் தம் உரிமை வாழ்வைப் பெற்றிட இன்று 56 நாடுகளில் 3000 உறுப்பினர் திருச்சபையில் பணிபுரிந்து 150 ஆண்டுகளை நற்செய்திப் பணியில் பூர்த்திசெய்து தொடர்ந்து ஆற்றலுடன் செயல்பட்டுக்கொண்டு வருகின்றார்கள்.

# அப்போஸ்தலிக்க கார்மேல் சபை



கிறிஸ்து ஜெயந்தியின் 2000 ஆண்டு யூபிலியை மனநிறைவோடு வரவேற்கும் திருச்சபையோடு அப்போஸ்தலிக்க கார்மெல் சபையினரும் 'இறைவனே எம் வாழ்வின் நிறைவு' என்ற விருதுவாக்கோடு புதிய சகாப்தத்தில் பல்வேறு பணிகளை சிரமேற்கொண்டு நுளைகின்றது. அன்னை வெரோணிக்காவை ஸ்தாபகியாகக் கொண்டு 1868 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டு பயோன் நகரில் துளிர்விட்ட எம் சபை இன்று பல்வேறுபட்ட இன்னல்கள் இடையூறுகளைக் கடந்து இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், உரோம், ஆபிரிக்கா, குவைத் போன்ற இடங்களில் தனது கிளை இல்லங்களை விஸ்தரித்துள்ளது. இந்தியாவின் பெங்களூரை தாய் ஸ்தலமாகக் கொண்ட எம் சபை இன்று இலங்கையில் 76வது வருடத்தின் நுழைவாயிலில் நிற்கின்றது. இலங்கையில் 34 கன்னியர்கள் இல்லங்களைக் கொண்ட எமது சபை கல்விச்சேவையை பிரதான நோக்காகக் கொண்டிருப்பினும் திருச்சபையில் எமது வாழ்வும் அப்போஸ்தலிக்க பணியும் கிறீஸ்துவின் வாழ்விலும் பணியிலும் பங்குகொள்வது என்பதற்கேற்றவாறு இன்று பங்குத்தளங்களில் பணி, அனாதை இல்லங்கள், கருணை இல்லம், மலையகத்தில் பணி, குடும்பங்கள் மத்தியில் பணி, சிறுவர் நலம் பேணல், பாப்பரசர் பிரதிநிதி இல்லம், மறியற்சாலைப் பணி, நோயாளிகளை பராமரித்தல், மாணவியர் இல்லம் போன்ற பல பணிகள் செய்து வருகின்றனர். இன்று 2500ற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட எம் சபை 5 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றது. இன்று இலங்கையும் ஒரு மாகாணமாக விஸ்தரித்துள்ளது. எமது சபையில் இணை உறுப்பினர்களாக 2 பிரிவினரையும் கொண்டுள்ளது. ஒன்று, அப்போஸ்தலிக்க கார்மேல் மலர்கள் ஒன்றியம். இரண்டாவது, அப்போஸ்தலிக்க கார்மேல் அன்னையர் ஒன்றியம்.

ஆதித் திருச்சபையில் தனது மறைந்த பிரசன்னத்தால் வழிநடத்திய கார்மேல் அன்னை வழியாகவும் கிறீஸ்து ஊடாகவும் இறைவனே எம் வாழ்வின் நிறைவு என்பதை உலகறியச் செய்வதே எம் பணி.

# நல்லாயன் சபை

புனித மேரி யூப்ரேசியா பெலற்றியர் (1796-1868) என்பவரினால் நல்லாயன் கன்னியர் சபை ஆஞ்சே நகரில் 1835ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டது. இது பரிசுத்த தந்தை 16ஆம் கிறகோரி என்னும் பாப்பரசரினால் 1835ஆம் ஆண்டு தை மாதம் 16ஆம் திகதி திருச்சபையின் அங்கீகாரம் பெற்ற ஒரு துறவற சபையாக பிரகடனப்படுத்தப் பட்டது.

ஓர் ஆன்மா முழு உலகைவிட மேலானது என்ற விருதுவாக்கிற்கேற்ப நாம் புண்பட்ட உள்ளங்களைக் குணப்படுத்தல், வழி தவறியோரை நல்வழிப்படுத்துதல், வெறுக்கப்பட்டோரை ஒதுக்கப்பட்டோரை அரவணைத்தல், யாவருக்கும் அன்பைப் பகிர்ந்தளிப்பதும் எமது அருங்கொடையாகும்.

இவ்வாறு நல்வழிக்குக் கொண்டுவரப்பட்ட மக்கள் தம்மை முழுமையாக இறைபணிக்கு அர்ப்பணித்து செப, தப வாழ்வில் ஈடுபட விரும்புவோருக்கு நல்லாயனின் தியான சபையும் ஆரம்பிக்கப் பட்டது. தற்போது யாழ் நகரில் நாம் சமுதாயத்தால் வெறுத்து ஒதுக்கப்பட்டவர்கள், தவறிய இளம் பெண்களைப் பரிபாலித்து பராமரித்தல், பிளவுபட்ட குடும்பங்களை ஒன்றுசேர்த்தல், பங்குப் பணிகளில் ஈடுபட்டு தலத் திருச்சபையில் பணிபுரிந்து வருகின்றோம்.

இந்த யூபிலி ஆண்டில் நாம் நற்கருணையையும் இறைவார்த்தையையும் எம் வாழ்வின் மையமாகக் கொண்டு நாம் மனம் மாறுவதுடன் எமைச் சார்ந்த மக்கள் அனைவரையும் புதிய மனமாற்றத்திற்கு அழைத்துச் செல்வதையும் நோக்காகக் கொண்டுள்ளோம்.

# திருவுளச் சபை

ஸ்தாபகர் : அருட்பணி லூயி மரிய பரான் அ.ம.தி.
ஸ்தாபகம் : 1958.07.02 (கனடா)
தனிவரம் : எங்கெல்லாம் கிறிஸ்துவுக்கு உரிமையுண்டோ அங்கெல்லாம் இந்நிகழ் நேர நொடிப் பொழுதில் மங்கள வார்த்தையின் போது மரியன்னை இருந்த மனநிலையுடன் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றும் கிறிஸ்துவின் கருவியாய் உலகின் மத்தியில் இருப்போம்.
ஆன்மீகம் : பயிற்சிகள் 5
- இறைவார்த்தை, தியானம், திருப்பலி-திருவிருந்து, நற்கருணை சந்திப்பு, மரியன்னை பக்தி(செபமாலை).
மனப்போக்குகள் 5 :
- இறைபிரசன்னம், குறைகூறாமை, முறையிடாமை, மனமகிழ்ந்த சேவை, சமாதானத்தின் கருவி.
செயற்பாடுகள் 5 :
- பிறரன்பின் செயல்கள் நாள் ஒன்றிற்கு 5
பணி நோக்கு : கிறிஸ்து இயேசுவில் சகோதரத்துவத்தையும் சமாதானத்தையும் கட்டியெழுப்புதல்.
விருது வாக்கு : அமலமரி வழி இறைசித்தம்.
அங்கத்துவம் : குருக்கள், மணத்துறவு ஆண்கள், திருமணத் தம்பதிகள் (குடும்பம்).
தனித்துவம் : உலகியல் சார்ந்த அர்ப்பணம் அதாவது குருக்கள் திருமணமாகாத ஆண்கள் திருமணத் தம்பதிகள் தத்தமது நிலையில் இருந்துகொண்டே தம்மை இச்சபையில் இணைத்து, இறைத் திருவுளத்திற்கு தம்மை அர்ப்பணித்து இச்சபையின் ஆன்மீகத்தை வாழ்வதன் வழியாக தம்மை புனிதப்படுத்துதல்.
சிறப்பு : யாழ் மண்ணில் அடிக்கல் வைத்த 25 ஆண்டு நிறைவு.
யூபிலித் திட்டம் : சபை உறுப்பினர்களை பங்கு மட்டங்களில் குழுக்களாக ஒன்றுசேர்ந்து சபையின் ஆன்மீக மனப்போக்குகளை அவர்களில் வளர்த்து பங்குப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடச் செய்தல்.

# புனித வளனார் துறவிகள்

1875ஆம் ஆண்டு ஆயர் யூலைனால் இச்சபையானது கொழும்புத்துறை யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இச்சபையின் நோக்கம் இளைஞர்களை வழிநடத்துதல் - விசேடமாக படிப்பித்தல், அநாதைகளை பராமரித்தல், கைத்தொழில் பயிற்சியகங்களை உருவாக்குதல் போன்ற பணிகளில் ஈடுபட்டுக்கொண்டு வருகிறார்கள். தற்போது இச்சபையானது யாழ்ப்பாணம், கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, ஹட்டன் போன்ற இடங்களில் தமது சேவைகளை ஆற்றி வருகிறார்கள். அநேகமாக பாடசாலைகள் நடத்துவதில் கூடிய கரிசனை எடுக்கிறார்கள். உ-ம்: புனித மிக்கேல் கல்லூரி-மட்டக்களப்பு, பாத்திமா கல்லூரி-கல்முனை, புனித சூசையப்பர் கல்லூரி-திருகோணமலை, புனித ஜோன் போஸ்கோ கல்லூரி-ஹட்டன் என்பவற்றில் சேவையில் ஈடுபட்டுள்ளார்கள். தற்போது ஊர்காவற்துறையிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரியை மீண்டும் இயக்கி இளைஞர்களுக்கும் பாடசாலையிலிருந்து விலகியவர்களுக்கும் இந்த உருவாக்கல் பயிற்சியை தொடர வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

# திருக்குடும்ப சபை

யூபிலி ஓர் மகிழ்வான நிகழ்வு. இது ஓய்வு, ஒப்புரவு, மன்னிப்பு, விடுதலை, தூய்மை, அன்பு, மகிழ்வு, பகிர்தல் ஆகிய வாழ்வுக்கு அத்தியாவசியமானதும் அடிநாதமுமான பல விழுமியங்களைத் தன்னகத்தே உள்ளடக்கி மிளிர்கின்றது. (லேவி 25:1-55). இப்புத்தாயிரமாம் ஆண்டிலே திருக்குடும்பத் துறவிகளாகிய எம்மை மிக விரைவாக ஓடுகின்ற, மாறுகின்ற, வளருகின்ற, தேய்கின்ற, அமைதி இளக்கின்ற, பலன் கொடுக்கின்ற இந்த யுகத்தின் போக்கிலே சற்றுத் தரித்து நின்று எமக்கு, எம் குழுமங்களுக்கு, எம் சமுதாய ஈடுபாடுகளுக்கு, நற்செய்தி அறிவிப்புப் பணிகளுக்கு நல்ல ஓய்வு கொடுத்து ஆரோக்கியமான மன உணர்வு பெற, எம்மையே நாம் திரும்பிப் பார்க்க அழைப்பு விடுக்கின்றது.

எம் நிறுவுனரின் அகக்காட்சியில் திரித்துவக் கடவுளின் சங்கமாகிய அவருடைய அன்றாட சாதாரண வாழ்க்கையில் அன்றைய கால சமுதாயத் தேவைகளுக்கு சவால்களுக்கு முகம்கொடுக்க ஆவியின் அருங்கொடைகள் அபரிமிதமாய் பொழியப்பட்டு அவரால் உருவாக்கப்பட்ட சபையே எம் திருக்குடும்ப சபையாகும். திருக்குடும்பத்தை ஆதிக் கிறிஸ்தவர்களின் வாழ்க்கைமுறையைய மாதிரிகையாகக் கொண்டு வாழ அழைக்கப்பட்ட இச்சபையின் விருதுவாக்கு 'இறைவன் மாத்திரமே'. குடும்பமாக வாழ்ந்து சமுதாயத்தில் நல்ல குடும்பங்களை உருவாக்கும் அருங்கொடையை தம் வாழ்வின்" உந்துசக்தியாக ஏற்றுக்கொண்டு யேசு என்ற நற்செய்தியைப் பரப்ப முன்னொருபோதும் இல்லாத அளவு வேகமான ஆவலுடன் இப்புது மிலேனியத்தில் உந்தித் தள்ளப்படுகின்றார்கள் ஒவ்வொரு திருக்குடும்ப சபைத் துறவிகளும்.

இறைவனை ஆழமாக அன்புசெய்து அவ் அன்பின் வெளிப்பாடாக பிறரன்பு, மனித நேயம், செபிக்கும் ஆர்வம், செவி சாய்த்தல் மன்னித்தல், ஒப்புரவாகுதல், இரக்கம், சாந்தம் ஆகிய பண்புகளில் தோய்ந்து எல்லாவிதமான பாகுபாடுகளுக்கும் எதிராக நின்று மனித மாண்பை உறுதிப்படுத்தவும் இறைவார்த்தை நற்கருணை இவற்றால் ஊட்டம் பெற்று விசுவாசத்தை எம் சாதாரண வாழ்வால் பரப்பி உறுதிப்படுத்தி திருமுழுக்கு வழியாகவும் துறவற அர்ப்பணத்தின் வழியாக இறைவன் எம்மில் ஏற்றிய சுடரை மங்காது சுடர்விடச் செய்யும் தூண்டும் காலமே இவ் யூபிலிக் காலமாகும்.

இதற்கு,

- விரைவாக ஓடுகின்ற உலகில் அமைதியாக இருந்து இறைபிரசன்னத்தை உணரவும்,
- இறைவனையும் அயலவனையும் ஆழமாக அன்புசெய்யவும்,
- காய்ந்து வரண்டு மரத்துப்போன இதயங்களுக்கு அன்பு என்னும் நன்னீரைப் பாய்ச்சி மலரவைக்கவும்,
- ஏழ்மையால் இளைத்துக் களைத்துப் போனவர்களுக்கு எம் இதயம், நேரம், ஆற்றல்கள், பொருட்கள், உதவிகளை பகிர்ந்து வாழவும்,
- எம் அயலவர்களை கொடுமைப்படுத்தும் எல்லாக் கொடுமைகளுக்கும் எதிராக நின்று நீதிக்குரல் எழுப்பி அவர்களை மீட்கவும்,

குடும்பமாக வாழ்ந்து குடும்பங்களை அமைக்கும் எம் அருங்கொடை வழியாக இவ் யூபிலி ஆண்டில் புதுப்பார்வையுடன் வாழ இறைவன் எம்மை அழைக்கின்றார்.

## புனித யூபிலி ஆண்டின் 2000

### பரிசுத்த பாப்பரசரால் அர்ப்பண வாழ்வினருக்கென விடுக்கப்பட்டுள்ள அழைப்பு

திரிதின வழிபாட்டு நிகழ்வுகள்
இடம் - அப்போஸ்தலிக் கார்மல் மடம்

தை 30 - (magnificat) புகழ்ச்சி - நன்றி

தை 31 - இடம் தி. கு. மாகாண இல்லம்
'ஐக்கியத்தின் நாள்' - ஒப்புரவு வழிபாடு

மாசி 01 - நற்கருணை (Eucharist)
இடம் - தொடர்பகம் (அ.ம.தி.)
நற்கருணை ஆராதனை

மாசி 02 - 'அர்ப்பண வாழ்வினரின் யூபிலி நாள்'
யூபிலி யாத்திரை
நற்கருணை வழிபாடும் திருப்பலியும்

இறைமக்கள் அனைவரையும் இந்நாட்களில் எம்முடன் ஒன்றித்து எமக்காக செபிக்க வேண்டுகின்றோம்.

யாழ் மறைமாவட்ட அர்ப்பண வாழ்வினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவலைகள்

| 30ஆம் ஆண்டு | 20ஆம் ஆண்டு |
|---|---|





**திரு. தொம்மைப்பிள்ளை தம்பிராசா**

**திருமதி. றோசமரியரத்தினம் தம்பிராசா**

| தோற்றம் | மறைவு | தோற்றம் | மறைவு |
|---|---|---|---|
| 01.08.1896 | 08.02.1971 | 01.05.1900 | 20.02.1981 |

உயிர்த்தெழச் செய்பவனும் வாழ்வு தருபவனும் நானே!
என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்.
(யோவான் 11:25)

ஆண்டு பல ஆனாலும் ஆறாது எம் துயரம்,
நூறாண்டு போனாலும் நூராது நம் கவலை

இவர்களின் ஆன்ம சாந்திக்காக 12.02.2000 காலை 6.30 மணிக்கு (புதிய நேரம்) யாழ் மரியாள் பேராலயத்திலும் 19.02.2000 காலை 6.30 மணிக்கு அருள் ஆச்சிரமத்திலும் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குகொண்டு செபிக்குமாறு வேண்டுகின்றோம்.

Merciful lord Jesus grant them everlasting rest.
The holy sacrifice of Mass will be offered for the repose of the souls on:
12.02.2000 at St Mary's Cathedral Jaffna 6.30 a.m. S.L.T.
19.02.2000 at Arul Archchiramam, Temple road, Jaffna 6.30 a.m. S.L.T.

14(13) டேவிட் றோட்,
யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## 5ஆம்ஆண்டு நினைவலைகள்

மலர்வு 12 04 1928



உதிர்வு 21 01 1995

### அரியரட்ணம் மேரிமக்டலீன் (மலர்)

உங்கள் ஆத்மா சாந்தியடைய
என்றும் இறைவனை வேண்டுகிறோம்.

"கனகராஜா வில்லா"
கபாற் கந்தோரடி,
நெல்லியடி, கரவெட்டி.

இவரது பிரிவால் துயருறும்,
சகோதரி சிஸ்ரர் தாசில்லா(H.F.C.)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 5ஆம் ஆண்டு நிறைவில்

அன்னையின் மடியில் 27 04 1919



ஆண்டவன் அடியில் 22 01 1995

### அமரர் சவரிமுத்து ஆசீர்வாதம் போல்

"கோதுமை மணி மண்ணில் வீழ்ந்து
மடிந்தால் தான் மிகுந்த பலனளிக்கும்"
(அரு 12:24)

உயிர்ப்பும் உயிருமாகிய இறைவா!

மனித வாழ்வு உம்மிடமிருந்தே உதயமாகி உம்முடைய இன்ப சன்னிதானத்திலேயே சங்கமமாகி விடுகிறது. உம் தந்தைக்குரிய அன்பில் முடிவில்லா வாழ்வை எமது தந்தைக்கு அளித்தருள இரந்து வேண்டுகின்றோம் இறைவா, ஆமென்.

51/1, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அகில உலக அர்ப்பண வாழ்வினரின் சிறப்பிதழின் தொடர்ச்சி வருமாறு

# செபமாலைத் தாசர் சபை

இறைவனின் மீட்புத்திட்டத்தை நிறைவேற்ற, இறைவனின் சித்தத்தை வழிநடக்க, திருச்சபையிற் தோன்றும் ஒவ்வெரு சபைக்கும் ஒவ்வொரு நோக்கமுண்டு. செல்கின்ற பாதையுண்டு அதற்கெனத் தனிவரமுமுண்டு அது இறைவனால் அருளப்படுவது.

கீழ்த்திசையிலிருந்து அஞ்ஞான இருளை அகற்ற, உலகெங்கிலுமிருந்து பாவ இருளை அகற்ற கீழ்த்திசையிலிருந்தே ஒரு சபை தோற்றுவிக்கப்பட வேண்டுமென்று கண்ட இறைவன் அதற்கு அருட்திரு பி.ஏ.தோமஸ் அடிகளாரைத் தோர்ந்தெடுத்து அவரைக் கருவியாகக்கொண்டு செபதபத்திற்கென்றே செபமாலைத் தாசர் சபையை நிறுவினார். இச்சபையினரின் தனிவரமே பரிகாரக் காவலாகும் அதாவது நற்கருணைநாதர் முன் இரவும் பகலும் உலகினர் பாவங்களுக்குத் தாமே பரிகாரப் பொருளாய் நின்று காவல் காத்து செபிக்கிறார்கள்.

இது உண்மையில் திருச்சபையின் செயற்பாடே! கிறிஸ்து உலகிற்கு வந்தது மனிதனின் பாவத்தைக்கழுவி, தமது தெய்வீகத்தை அவனுக்குக் கொடுத்து, அவனைத் தெய்வீகத்தில் நிலை நிறுத்தவே!

அதற்காகவே அவனுக்கு ஆன்மீக உணவும் ஆன்மீக உறவுமாக நற்கருணையை தம்மைப் பலிப்பொருளாக்குவதற்கு முதல் நாள் ஏற்படுத்தினார். இதனால் திருச்சபையின் மையப்பொருளே நற்கருணையாகும். தாவரம் வளர தண்ணீர்,உரம் தேவை. உயிரினம் வளர உணவு தேவை. அதேபோல மனிதன் ஆன்மீகத்தில் வளர ஊட்டம் கொடுக்கின்ற உணவே நற்கருணையாகும். இது நம்மைத் தெய்வீக வாழ்வுக்கு உயர்த்துவதோடு தெய்வீக உறவிலும் வளர்க்கிறது, பலப்படுத்துகிறது.

ஆகவே நற்கருணை இன்றித் திருச்சபை இல்லை.

அதே நற்கருணை இன்றேல் செபமாலைத் தாசர் சபையினர்வாழ்வில் பொருள் இல்லை.

இந்தப் புத்தாயிரமாம் ஆண்டைப் பிறப்பிக்கும் இரண்டாயிரமாம் ஆண்டுக்கு நற்கருணையை மையப்பொருளாக பிரகடனப்படுத்தியிருப்பது மிகமிகப் பொருத்தமே.

## துயரோடும் தடையோடும் போராடி மீண்டும் ஓர் ஆலயப் புகுவிழா

பகைவனின் குண்டுமாரிக்குப் பலியாகிய நவாலி சென். பீற்றஸ் தேவாலயத்தின் புணருத்தாரணம் 22-01 சனிக்கிழமை அன்று இறைவன் அருளாள் இனிதே நிறைவுற்றது பல்வேறு சவால்கள் தடைகளுடாக இவ்வாலயம் மீண்டும் புத்துயிர் பெற்றமைக்கு இறைவனுக்கு நன்றிசெலுத்தும் முகமாக இளவாலை மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் அன்று பிற்பகல் 3.00 மணியளவில் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது

மறையுரையாற்றிய அருட்திரு சகாயநாயகம் அடிகளார் பழைய ஏற்பாட்டில் வாக்குத்தத்தப்பேழை எவ்விதம் இறைபிரசன்னத்தின் அடையாளமாக விளங்கியதோ அவ்வாறே இவ் ஆலயமும் இறைவன் குடிகொள்ளும் அன்புப்பிரசன்னத்தின் அடையாளமெனக் குறிப்பிட்டார். மேலும் அவர் உயிருள்ள கற்களால் கட்டப்பட்ட இவ்வாலயம் போன்று எம்முள்ளமாகிய ஆலயமும் புனிதமாக இறைவன் குடிகொள்ளும் ஆலயமாக விளங்க வேண்டுமென்வும் குறிப்பிட்டார்

திருப்பலி முடிவில் எமது பங்குத்தந்தை அருட்திரு அ.ப. அந்தோனிப்பிள்ளை அடிகளார் தம் நன்றியுரையில் கடந்த காலங்களில் இப்பங்கில் பணியாற்றிய அருட்தந்தையர்களுக்கும், ஆலயத்தின் புணருத்தாரணத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கும் தம் நன்றியைத் தெரிவித்தார். பல்வேறு இழப்புக்களைச் சந்தித்தும் மக்கள் இறைவனில் கொண்ட ஆழமான விசுவாசமும் இந்நிகழ்வின் வெளிப்பாடாக அமைந்தது

*திவ்ய இருசுமுத்து*

## கிறிஸ்து அரசர் ஆலயம் கொய்யாத்தோட்டம்

### வெள்ளிவிழா நிதியச் சீட்டிழுப்பு முடிவுகள்

1ம்.பரிசு : இல. 85
2ம்.பரிசு : இல. 297
3ம்.பரிசு : இல. 777

ஆறுதல் பரிசுகள் : 1135, 256, 301, 729, 1394, 1395, 294, 885, 1202, 1138.

பரிசுக்குரியவர்கள் உரிய சீட்டைக் கொண்டுவந்து தங்களது பரிசினைப் பெற்றுக்கொள்ளளலாம். ஆதரவுதந்த அனைவருக்கும் நன்றி.

பங்குத்தந்தை.

## திருநாடு அலங்கரித்த ஓர் ஆண்டு நினைவு

மலர்வு 22 05 1921



உதிர்வு 01 02 1999

### திருமதி. இரத்தினர் சூசைப்பிள்ளை

**புண்ணியத்தின் மலர்வனமே**


கண்ணீரின் துளிகளினால் கவலை மாலை
காலடிமேல் வைக்கின்றோம் கருணைத் தாயே
வண்ணமலர் முகம்வாடி இமைகள் மூடி
வருடமொன்று மறைந்தாலும் அமுதம் வார்த்த
புண்ணியத்தின் மலர்வனமே எம்மைச் சூழ்ந்தே
புன்னகையும் பொன்னுரையும் பொழியுதம்மா
விண்ணரச மணிமாடம் வீற்றிருந்தே
வேதனைகள் தீர்த்தருள வேண்டு கின்றோம்

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக மாசி மாதம் 01ஆம் திகதி யாழ் அடைக்கல அன்னை ஆலயத்தில் காலை 6.30 (பு.நே.) மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இல.5, மாட்டீன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## Sixth Anniversary



**Fr. Anton Rajakariar**

We loved him in life -
Let us not forget him in death.

Block L9,
First Floor, Govt. Flats,
Colombo-4.

Jessa Tambinayagam.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்

# இனப்பிரச்சனை ஓர் அரசியல் பிரச்சனையே

# இராணுவப் பிரச்சனை அல்ல

## இலங்கைக்கு வருகை தந்துள்ள நோர்வே வெளிவிவகாரத் துணையமைச்சரிடம் ஆயர்கள் தெரிவிப்பு

"இனப்பிரச்சனை ஓர் அரசியல் பிரச்சனையாகும். அதனை இராணுவப் பிரச்சனையாக்கியது தவறு. இப்போதாவது அதை அரசியல் பிரச்சனையாக ஏற்று அரசியல் ரீதியில் தீர்வு காணப்பட வேண்டும்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள நோர்வே வெளிவிவகாரத் துணையமைச்சர் லெவிலூட்டியை இரத்தினபுரி ஆயர் பேரருட்திரு மல்கம் ரஞ்சித்தும், மன்னார் ஆயர் பேரருட்திரு இரா. யோசப்பும் திருத்தந்தையின் பிரதிநிதியுடன் சந்தித்துக் கலந்துரையாடிய போது ஆயர்கள் இவ்வாறு அவரிடம் தெரிவித்தனர்.

நோர்வே துணையமைச்சரிடம் ஆயர்கள் மேலும் சில கோரிக்கைகளை விடுத்தனர். தமிழ் மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு பேச்சுக்களை ஆரம்பிக்குமுன்னர் யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானச் சூழ்நிலை ஏற்படவேண்டுமென்றும் சகல அரசியல் கட்சிகளினதும் ஆதரவுடன் ஒன்றுபட்ட யோசனை ஒன்றைத் தயாரித்து அதன் அடிப்படையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றும் அவர்கள் ஆலோசனை கூறினர்.

தமிழ் மக்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகள் நீங்கி, சகல துறைகளிலும் சமஉரிமை வழங்கப்படுவதுடன், தமிழர் கைதுசெய்து துன்புறுத்தப்படுவது நிறுத்தப்படவேண்டுமென்றும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

இங்குள்ள நிலைமையை மதிப்பீடு செய்யும் நோக்குடன் வந்துள்ள நோர்வே குழுவினர் பல பிரமுகர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்துள்ளனர். உலக அரங்கில் அமைதியைப் பேண தொடர்ந்து ஆர்வம் காட்டிவரும் நாடு நோர்வே ஆகும். இலங்கை இனப்பிரச்சனை விடயத்தில் அனுசரணையாளராகச் செயற்பட நோர்வே ஆயத்தமாக இருக்கிறது என இக்குழு தெரிவித்துள்ளது.

## ஆசிய ஆயர் பேரவையின் புதிய செயலாளர்

ஆயர் ஓஸ்வால்ட் கோமிஸ் ஆசிய ஆயர் பேரவையின் செயலாளர் நாயகமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். தற்போது இவர் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவராக இருந்து வருகிறார். பாங்கொக்கில் நடைபெற்ற ஆசிய ஆயர் பேரவையிலேயே இத்தெரிவு இடம்பெற்றது. இலங்கையர் ஒருவர் இப்பதவிக்கு தெரியப்பட்டிருப்பது இதுவே முதல்முறையாகும்.

1995ல் அனுராதபுர ஆயராக நியமிக்கப்பட்ட ஆயர் கோமிஸ் ஒரு எம்.ஏ. பட்டதாரியும் சமுகத்தொடர்பு துறையில் அவர் ஆற்றிய பணிக்காக கௌரவ கலாநிதிப் பட்டம் பெற்றவருமாவார். ஆசிய ஆயர் பேரவையின் ஆரம்ப காலத்திலிருந்தே அதன் பணிகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

### அருட்தந்தை . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இடையில் நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலையால் பாதிப்புற்று சுகயீனமடைந்த இவர் பின்னர் மேல்படிப்புக்காக 1993இல் பிலிப்பைன் நாடு சென்றார். இலங்கை திரும்பிய பின் இவர் 1994-1997 வரையான காலப்பகுதியில் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் முழுநேர விரிவுரையாளராகப் பணியாற்றினார். அதன் பின்னர் யாழ் ஆயரின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

பெயருக்கேற்ற அருமையான குணமும் உருவத்துக்கேற்ற ஆளுமையும், இனிய சுபாவமும் கொண்ட தந்தை அருமைநாயகம் தமது அர்ப்பண வாழ்வினால் யாழ் திருச்சபையை அலங்கரித்தார்.

## உரும்பிராய் பங்கில் யூபிலி ஆயத்த வழிபாடுகள்

மேற்படி வழிபாடுகள் 16.12.99 வியாளக்கிழமை ஆரம்பித்தது. 9 நாட்களும் தினமும் மாலையில் நற்கருணை ஆராதனையோடு ஆரம்பித்து இறுதியில் திருப்பலியுடன் நிறைவுறும் இவ் வழிபாடுகளில் கிறிஸ்து ஒரே மீட்பர், ஆவியால் வாழ்கிறோம், தந்தையிடம் செல்வோம் என்ற கருப்பொருட்கள் மூன்று நாட்களுக்கு ஒரு கருப்பொருளாகப் பிரித்துச் சிந்திக்கப்பட்டது. உறவுகள் அறுந்து, உணர்வுகள் சிதைந்து, உருக்குலைந்து போனதினாலும் நாளாந்த வாழ்விற்கே அல்லல்பட்டு, அடுத்தவேளை உணவிற்காய் அங்கலாய்த்து, பாவச் சேற்றில் திரும்பத்திரும்ப புரண்டமையினாலும் விவேகமற்ற கன்னியர்களின் நிலையாகிப்போன எம் வாழ்வுகள் இறைமனித உறவிலே சங்கமித்துப் புத்துயிர் பெற்று தூயதாக மாறி யூபிலி நாயகனாம் இயேசு பாலனை வரவேற்க நாம் தகுதியானவர்களாக மாற இவ்வழிபாடுகள் வழிசமைத்தன.

பங்கின் நற்செய்திப் பணியாளர் இவ்வழிபாட்டினை வெகுசிறப்பாக நடத்துவதற்கு பங்குத்தந்தையும் இரு அருட்சகோதரர்களும் இன்னும் இறுதி நாட்களிலே அருட்தந்தை ஜெராட் சவரிமுத்து அடிகளாரும் உறுதுணையாய் இருந்தது குறிப்பிடத்தக்கது.

J. றொசான்
(உரும்பிராய் நிருபர்)

## கரவைப் பங்கின் நத்தார் நிகழ்வு

யாழ் மறைமாவட்ட மக்களுக்கு ஆயர் அவர்கள் விடுத்த அழைப்பைச் சிரமேற்கொண்டு கரவைப் பங்குமக்கள் யூபிலி ஆண்டை ஆலயத்தில் ஒளியேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

1999 டிசம்பர் 24ஆம் நாள் நள்ளிரவு நெருங்கும் வேளையிலே கரவெட்டி பரலோக அன்னை வளாகத்திலே ஒரே குடும்பமாக இணைந்து வந்த கரவைப் பங்கு மக்கள் வளாக மையத்தில் நடைபெற்ற வார்த்தை வழிபாட்டை ஒளியேந்தி நிகழ்த்தி, ஒளியேந்திய கையினராக பங்குத் தந்தை யேசுரட்ணம் அடிகளார் முன்னே செல்ல பவனியாக ஆலய முகப்பை வந்தடைந்தனர். மூடப்பட்ட கதவண்டை நின்று 'நீதியின் கதவை எமக்குத் திறந்து விடும்' என்று உரத்தகுரலில் இசையெழுப்பிப் பாட மக்கள் கூட்டம் மகிழ்வின் ஆர்ப்பரிப்போடு தீபமேந்திய கையினராய் ஒருவர் பின் ஒருவராய் ஆலயத்துட் பிரவேசித்தது.

நள்ளிரவுத் திருப்பலியைத் தொடர்ந்து கரவைக் கத்தோலிக்க இளைஞர் தயாரித்து வழங்கிய நத்தார் கான மழை, கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது.

25ஆந் திகதி மாலை நெல்லியடி பேருந்து நிலையத்தில் கிறிஸ்து பிறப்பின் 2000 ஆம் ஆண்டைச் சித்தரிக்கும் பிரமாண்டமான பதாதையைப் பங்குத்தந்தை திரை நீக்கம் செய்துவைத்தார்.

சி. வின்சன்ற்
(கரவெட்டி நிருபர்)

### சகல கிறிஸ்தவர் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறைத்தந்தையின் சித்தப்படி கிறிஸ்துவினால் தூய ஆவியில் நிறுவப்பட்ட "கிறிஸ்துவின் திருச்சபை"யை நோக்கி அனைத்துக் கிறிஸ்தவர்களும் செய்யும் பயணத்தின் மூலம் அடையமுயலும் ஒன்றிப்பாகும்.

இதற்காக வத்திக்கான் சங்கம் கூறும் வழிவகைகள்: தமது குற்றங்களுக்காக மன்னிப்பு வேண்டுதல், நல்ல முன்மாதிரிகை, படிப்பும் ஆய்வும், அன்பும் மதிப்பீடும், உரையாடல், பொதுச் செபம், ஒத்துழைப்பு, ஆகியனவாகும்" எனக் கூறினார்.

அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த வண. நேசகுமார் அவர்களும் கருத்தரங்கில் உரையாற்றினார்.

ஜனவரி 23ஆம் திகதி றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற யூபிலி ஆண்டு ஐக்கிய ஒன்றிப்பு வழிபாட்டில் யாழ் ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களும், அருட்தந்தையர் பலரும், அங்கிலிக்கன் சபை, தென்னிந்திய சபை, மெதடிஸ்த சபை, கானான் சபை ஆகியவற்றைச் சேர்ந்த பெரியோர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இதற்கான ஆயத்த வழிபாடுகளும் கருத்தரங்குகளும் 18ஆம், 19ஆம், 20ஆம், 21ஆம் திகதிகளில் கத்தோலிக்க, தென்னிந்திய, மெதடிஸ்த, அங்கிலிக்கன் சபை ஆலயங்களில் நடைபெற்றன.

### கிறிஸ்துவில் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களாக இருக்கிறோம். இதுவே இன்று திருச்சபை மூன்றாவது மிலேனியத்துக்கு அளிக்க விரும்பும் உண்மை. வரலாற்றை மாற்றியமைத்த இந்த உண்மையை எமக்குப் பின்வரும் நீங்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வீர்களாக" என்று கூறினார்.

புதிய மனிதனான கிறிஸ்துவிலேயே மனித வாழ்வெனும் மறைபொருளுக்கு உண்மையான ஒளி கிடைக்கிறது என்பதை வலியுறுத்தினார். மேலும் அவர் கிறிஸ்துவை வாழ்த்தி "தந்தையிடமிருந்து வந்த கிறிஸ்துவே தூய ஆவியில் எம்மைத் தந்தையிடம் அழைத்துச்செல்வீராக. தந்தையிடம் செல்லும் வாயிலாக எமக்கு நீர் இருந்தருளும்" என்று பிராத்தித்தார்.

### புங்குடுதீவு . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெண்ணாட்சி நடைபெறும் இச்சிறிய நாட்டில் பெண்ணினம் தனித்து வாழமுடியாத துர்ப்பாக்கிய நிலை உருவாகியுள்ளது மிகவும் வேதனைக்குரியதாகவுள்ளது.

தாய்க்குலம் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் தாய்மையுணர்வோடு எல்லா மக்களும் இப்படியான செயல்களைக் கண்டிப்பதோடு நின்றுவிடாமல் இனிமேலாவது இவ்வாறான செயல்கள் எமது பகுதியில் மாத்திரமல்ல, நாட்டின் எந்தப் பகுதியிலும் எந்த வகையில் நிகழ்ந்தாலும் அதை எதிர்த்து போராடவேண்டியது மனித நேயம் கொண்ட அனைத்து மக்களது கடமையாகும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வன்னியில் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் மக்களுக்கு நம்பிக்கையாய் இருக்கின்றனர். அதுமட்டுமல்ல யூபிலி ஆண்டினை போரின் மத்தியிலும் சிறப்பாக ஒழுங்கு செய்து அமைதியான ஆன்மீக முறையில் கொண்டாடியுள்ளதை உணரக்கூடியதாக உள்ளது. பல பங்குகளில் யூபிலிப் பதாகைகளையும் போஸ்ரர்களையும் காணக்கூடியதாக இருந்தது. இது மனதிற்கு மகிழ்ச்சியாக இருந்தது" என்று தெரிவித்தார்.

## நாட்டின் மதிப்பீடுகளைப் பாதுகாப்பது மதத் தலைவர்களின் கடமையாகும்

### சர்வமதத் தலைவர்கள் மாநாட்டில் தெரிவிப்பு

"நாட்டின் மதிப்பீடுகள் படிப்படியாக முற்றும் அழிக்கப்பட்டு வருகின்றன. அரசியல்வாதிகள் சகல அதிகாரங்களையும் தமது கையில் எடுத்துக்கொண்டிருப்பது எல்லா விதங்களிலும் மக்களை பாதித்துள்ளது. ஊழலும் அதிகாரத் துஷ்பிரயோகமும் எங்கும் காணப்படுகின்றன. நாட்டில் நீதியும் சட்டமும் ஒழுங்கும் பாதுகாக்கப்பட வேண்டுமானால் பொலிஸ் சேவையும் அரசாங்க சேவையும் சுதந்திரமாக செயற்பட அனுமதிக்கப்பட வேண்டும். தலைவர்கள் துணிவுடனும் கட்டுப்பாட்டுடனும் அர்ப்பணத்துடனும் நாட்டை வழிநடத்த வேண்டும்" என பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற சர்வமதத் தலைவர்கள் மகாநாட்டில் ஆயர் பேரவைத் தலைவரான பேரருட்திரு ஒஸ்வால்ட் கோமிஸ் அவர்கள் கூறினார்.

சங். பெலன்வில விமலரத்ன நாயக தேரோ பேசுகையில் மதத் தலைவர்கள் ஒன்றுசேர்ந்து தற்போதுள்ள ஒழுக்க ஆன்மீக சீர்கேட்டைத் தடுப்பதற்கு ஒரு திட்டம் வகுக்க வேண்டுமெனக் கூறினார்.

இம்மகாநாட்டில் சுமார் 200 மதத் தலைவர்கள் கலந்துகொண்டனர். மகாநாட்டின் முடிவில் ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டது. இவ்வறிக்கையை தொடர்பு சாதனங்கள் மூலமும் வழிபாட்டுத் தலங்கள் மூலமும் பிரசித்தப்படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இப்பத்திரிகை யாழ். பிரதான வீதி, 360 இலக்கத்தில் உள்ள புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் அதன் [illegible] முறையில் 2000ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.- P.197

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org